பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
30-08-2025 12 40
சனிக்கிழமை நண்பகல்

ஆகாஷ்வாணி செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு நரேந்திர மோடி ஜப்பானில் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு சற்றுமுன் சீனா புறப்பட்டுச் சென்றார்.
- நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறுதொழில்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- தமிழகத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் பத்து லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.
- ஜம்மு கஷ்மீரில் பெருமழை மற்றும் நிலச்சரிவு காரணமாக 11 பேர் உயிரிழந்தனர்.
- அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் – விஜய் சுந்தர் பிரசாந்த் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் -

பிரதமர் திரு நரேந்திர மோடி ஜப்பான் அரசுமுறைப் பயணத்தை முடித்துக் கொண்டு சற்றுமுன் சீனா புறப்பட்டுச்சென்றார்.

சீனாவின் Tiangin ல் நாளையும் நாளை மறுநாளும் நடைபெறவுள்ள ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் அவர் பங்கேற்கிறார்.

முன்னதாக ஜப்பான் மாகாணங்களின் ஆளுநர்கள் பங்கேற்ற கூட்டத்தில் திரு நரேந்திர மோடி உரையாற்றினார்.

இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு தொடர்ந்து வளர்ச்சிக் கண்டு வருவதாக அப்போது அவர் தெரிவித்தார்.

ஜப்பான் மாகாண ஆளுநர்கள் இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் பங்கேற்க வேண்டும் என்றும் பிரதமர் அழைப்பு விடுத்தார்.

இதனைத் தொடர்ந்து ஜப்பான் பிரதமர் திரு Shigeru Ishiba வுடன் புல்லட் ரயில் மூலம் Sendai சென்ற திரு நரேந்திர மோடி டோக்கியோ எலக்ட்ரான் தொழிற்சாலையை பார்வையிட்டார்.

செமி கண்டெக்டர் உற்பத்தி தொடர்பாக அவர் விரிவாக கலந்துரையாடினார்.

இதுகுறித்த புகைப்படங்களை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர், செமி கண்டக்டர் துறையில் இந்தியா கடந்த சில ஆண்டுகளாக முத்திரை பதித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த துறையின் வளர்ச்சியில் இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாக கூறியுள்ள திரு நரேந்திர மோடி, இதற்கு தமது அரசு ஊக்கம் அளித்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

>><><><<

மின்னணு பொருட்கள் மற்றும் உதிரி பாகங்கள் அனைத்தும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்ய வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருவதாக அத்துறைக்கான அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் நொய்டாவில் டெம்பர்ட் கிளாஸ் உற்பத்தி பிரிவை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

மொபைல் போனில் பயன்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களும் நடப்பு ஆண்டு இறுதிக்குள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

>><><><<

மத்திய அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகள் காரணமாக ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி புதிய உச்சத்தை எட்டியுள்ளதாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர் நடப்பு நிதியாண்டின் முதலாவது காலாண்டில் உள்நாட்டு உற்பத்தி ஏழு புள்ளி எட்டு சதவீத அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச அளவில் பொருளாதார வளர்ச்சி தேக்கம் கண்டுள்ள போதிலும் இந்த சாதனை படைக்கப்பட்டுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு தொலைநோக்கு அடிப்படையில் மேற்கொண்ட சீர்திருத்த நடவடிக்கைகளே இதற்கு காரணம் என்றும் திரு புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

>><><><<

மருத்துவ தொழில்நுட்பத்தின் முனையமாக இந்தியா உருவெடுத்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

புதுதில்லியில் மருத்துவ தொழில்நுட்பம் தொடர்பான உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய மருந்துத்துறை செயலர் திரு அமித் அகர்வால் இதனைத் தெரிவித்தார்.

குறைந்த செலவில் தரமான மருந்துகள் நம்நாட்டில் உற்பத்தி செய்யப்படுவதாக அவர் கூறினார்.

மருந்து உற்பத்தியில் புதுமை கண்டுபிடிப்புகளுக்கு மத்திய அரசு ஊக்கம் அளித்துவருவதாகவும் திரு அமித் அகர்வால் தெரிவித்தார்.

>><><><<

தேசிய சிறுதொழில் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி நாடுமுழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் சிறுதொழில்கள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் சிறுதொழில்களின் பங்கு இன்றியமையாதது என்று குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு உற்பத்திக்கு ஆதரவு அளிப்போம் என்று இந்நாளில் உறுதியேற்றுக்கொள்வோம் என்று திரு சிவராஜ் சிங் சவுகான் கூறியுள்ளார்.

>><><><<

*பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனந்திறந்து பேசும் மன்கி பாத் நிகழ்ச்சி அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.*

*நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.*

*பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்புகிறது. இது இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பும் செய்யப்படுகிறது.*

*தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.*

*>><><><<*

*தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் 10 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு முதலீடுகள் ஈர்க்க்ப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.*

*ஜெர்மனி மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு ஒருவார கால அரசுமுறைப் பயணமாக இன்று சென்னையில் இருந்து புறப்படுவதற்கு முன் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.*

*இதுவரை அமெரிக்கா, ஸ்பெயின், ஜப்பான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்டில் தொழில் முதலீடுக்காக தாம் மேற்கொண்ட பயணத்தின் போது 29 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டதாகவும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்தார்.*

*>><><><<*

*ஜம்மு கஷ்மீரில் நேரிட்ட நிலச்சரிவில் சிக்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் உயிரிழந்தனர்.*

*Reasi மாவட்டத்திற்கு உட்பட்ட கிராமப்பகுதியில் உள்ள இவர்களது குடியிருப்பு பெருமழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் முழுமையாக பாதிக்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*இதனையடுத்து மலைப் பகுதியில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு ஜம்மு கஷ்மீர் அரசு கேட்டுக் கொண்டுள்ளது.*

மழை மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்படக்கூடும் என கண்டறியப்பட்டுள்ள பகுதியில் வசிப்போர் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே ரம்பன் மாவட்டத்திற்கு உட்பட்ட *Rajgarh* பகுதியில் பெய்த பெருமழை காரணமாக உயிரிழந்தோர் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது.

அப்பகுதியில் காணாமல் போனவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் பிரதமர் அலுவலக இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், முதலமைச்சர் திரு உமர் அப்துல்லாவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பாதிப்பு விவரங்களை கேட்டறிந்தார்.

மழை மற்றும் நிலச்சரிவால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு டாக்டர் ஜிதேந்திர சிங் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொண்டார்.

>><><><<

தெலங்கானா சட்டப்பேரவையின் மழைக்கால கூட்டத் தொடர் இன்று தொடங்கியது.

இன்று பிற்பகல் அலுவல் ஆய்வுக் குழு கூடி இந்த கூட்டத் தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து இறுதி செய்யவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>><><><<

பங்களாதேஷில் இருந்து ஊடுருவ முயன்ற 33 பேரை அசாம் காவல்துறை தடுத்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ ஷர்மா கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைத் தெரிவித்துள்ள அவர் எல்லைப் பகுதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து தீவிரப்படுத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

>><><><<

*2030ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு இந்தியா உரிமை கோரியுள்ளது.*

*லண்டனில் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி சம்மேளனத்தின் தலைவரிடம் இதற்கான விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது.*

*இப்போட்டியை அகமதாபாத்தில் நடத்துவதற்கு உரிமை கோரி இந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக குஜராத் மாநில விளையாட்டுத் துறை அமைச்சர் திரு Harsh Sanghava செய்தியாளரிடம் தெரிவித்தார்.*

*தேசிய விளையாட்டு தினமான நேற்று இந்த விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு இருப்பது மகிழ்ச்சிகரமானது என்றும் அவர் கூறினார்.*

*விளையாட்டுத் துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் மத்திய அரசோடு ஒருங்கிணைந்து மாநில அரசு செயல்பட்டு வருவதாகவும் திரு Harsh Sanghava தெரிவித்தார்.*

*>><><><<*

***<u>விளையாட்டுச் செய்திகள்</u>***

*அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் – விஜய் சுந்தர் பிரசாந்த் இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 3-6, 6-3, 6-4 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Evan Kang – Christan Harrison இணையை வென்றது.*

*>><><><<*

*உலக ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில், இந்தியாவின் பிரணவ் வெங்கடேஷ் முதலிடத்தில் உள்ளார்.*

*ஐக்கிய அரபு எமிரேட்டின் Fujairah-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் இதுவரை நான்கரை புள்ளிகளை அவர் பெற்றுள்ளார்.*

*>><><><<*

காமன்வெல்த் பளு தூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, 2 வெண்கலப் பதக்கம் வென்றது.

அஹமதாபாதில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 94 கிலோ எடை இளையோர் பிரிவில் Parv Chaudhary தங்கப்பதக்கத்தையும், சீனியர் பிரிவில் Dilbag Singh வெள்ளிப் பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் 86 கிலோ எடை சீனியர் பிரிவில் Vanshita Verma வும் ஜூனியர் பிரிவில் Amritha Suni யும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

>><><><<

புனேயில் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Diksha Sudhakar மற்றும் Suryaksh Rawat அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

>><><><<

ஆசியக்கோப்பை மகளிர் ஹாக்கிப் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி இன்று பெங்களூரில் இருந்து சீனா புறப்பட்டுச் சென்றது.

Salima Tete தலைமையிலான இருபது பேர்கொண்ட அணி Hangzhou -ல் அடுத்த மாதம் 5 ஆம் தேதி தொடங்கி 14 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் பங்கேற்கிறது.

>><><><<

உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய மகளிர் அணி குரேஷியா புறப்பட்டுச் சென்றது.

>><><><<